www.padippakam.com







X

ஈழமக்கள்
புரட்சிகர
விடுதலை
முன்னணி
EPRLF

படிப்பகம்

www.padippakam.com

# அன்புக்குரிய தமிழ் பேசும் மக்களே!

**1981** ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் ஸ்தாபன பூர்வமாக ஆரம்பிக்கப்பட்ட ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது ஈழ மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் மிகவும் உறுதியான முறையில் தனது பங்களிப்பபைச் செலுத்தி வந்தது. அதற்காக ஈடிணையில்லாத் தோழர்கள் பலரைத் தியாகம் செய்திருக்கின்றது.

ஈழப்போராட்ட காலத்திலும் சரி, இலங்கை-இந்திய சமாதான ஒப்பந்தத்துக்குப் பிந்திய காலகட்டத்திலும் சரி தோழர்கள் யார்? நண்பர்கள் யார்? எதிரிகள் யார்? என்ற விடயத்தில் கருத்துப் பிசகின்றி மிகவும் தெளிவான முறையில் செயற்பட்டு வந்திருக்கின்றது. சந்தர்ப்பவாதப் போக்குகளையோ அல்லது பதவிக்காக, அதிகாரத்திற்காக, பணத்திற்காக மக்களையும் போராட்டத்தையும் விலைபேசும் துரோகத்தனங்களையோ ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி எந்தக் கட்டத்திலும் மேற்கொண்டதில்லை.

போராட்டத்தின்போது ஒவ்வொரு போராளியினதும், ஒவ்வொரு போராட்ட அமைப்பினதும் அடிப்படை ஜனநாயக உரிமைகளுக்காகவும் போராடி வந்திருக்கின்றது. தமிழ் மக்கள் மத்தியில் அராஜகமும் பாசிசக் கொடூரங்களும் தலைதூக்கிவிடக்கூடாது என்ற நோக்கத்தில் மிகவும் உறுதியாகவும் விடாப்பிடியாகவும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி நடத்தி வந்துள்ள போராட்டத்தில் மிகப்பெரும் தியாகங்களைச் செய்ய வேண்டி ஏற்பட்டிருக்கின்றது. எத்தனையோவிதமான அவப்பெயர்களை அது சுமக்க வேண்டி ஏற்பட்டிருக்கின்றது. எனினும் ஈ.பி.ஆர்.எல்.எப் தனது தெளிவான பார்வையில் உறுதியான நம்பிக்கை கொண்டு செயற்பட்டு வந்திருக்கின்றது. அமைதியும் ஜனநாயகமும் நிலைநாட்டப்படுகின்றவரை அதற்கான போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்.

ஈழவிடுதலைக் குறிக்கோளுடன் நடத்தப்பட்ட போராட்டம் பிழையான திசைவழிக்குள் சென்றுகொண்டிருந்ததனாலும், தமிழ் மக்கள் தமக்குள்ளேயே தோன்றி வளர்ந்துவிட்ட துரோகத்தனங்களால் மனோரீதியிலும் சக்திரீதியிலும் பலவீனப்படுத்தப்பட்டதாலும், இதன் காரணமாக தமிழ் மக்களின் உயிர்களும் உடமைகளும் எந்தவித இலக்குமின்றி அழிந்து கொண்டிருந்ததனாலும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது 1987இல் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை, தமிழ் மக்களின் உடனடித்தேவை பற்றிய கணிப்பீட்டின் அடிப்படையில் ஏற்றுக்கொண்டது.

இந்த ஒப்பந்தம் பல குறைபாடுகளைக் கொண்டிருந்தபோதும், தமிழ் மக்களுக்கான நிரந்தரத் தீர்வை நோக்கிய பயணத்தில் அது நல்ல தொடக்கமாக இருந்தது. இன்று, அதையே மீண்டும் கொண்டுவருவதுதான் நல்லது எனச் சப்புக் கொட்டிக்கொள்ளும் தமிழ்ப் பெருந்தலைகளும், புத்திஜீவிகளும் அன்று ஓடி ஒளித்துக் கொண்டவர்கள்தான்.

சிறீலங்கா அரசுக்கும் புலிகளுக்கும் பயந்து தமிழர் விடுதலைக் கூட்டணியினரும், அன்றிருந்த ஏனைய பல தமிழ் அமைப்புக்களும் பின்வாங்கிப் பதுங்கிக் கொண்டபோது தமிழ் மக்களின் நீண்டகாலப் போராட்டத்தின் பயனாகக் கிடைத்த முதல் தமிழ் மாகாண அரசை நாம் எத்தனையோ தியாகங்களுக்கு மத்தியில் உருவாக்கப் பாடுபட்டு நடத்திக் காட்டினோம்.

சிறீலங்கா அரசினரின் சதியால் குடியேற்றத் திட்டங்கள் மூலம் பறிபோய்க் கொண்டிருந்த திருகோணமலையைத் தலைநகராக்கி, தமிழ் மக்களுக்கான தமிழ் அரசை நிறுவினோம். தமிழ் மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விடவும், பறிபோகும் நிலங்களைக் காப்பாற்றிக் கொள்ளவும், ஜனநாயகச் சூழலைத் திரும்பக் கொண்டு வரவும் வகை செய்தோம்.

ஆனால் சிங்கள அரசினருக்கும் புலிகளுக்குமிடையே ஏற்பட்ட சந்தர்ப்பவாதக் கூட்டினால் இந்திய அமைதிப்படை வெளியேறியது; மாகாணசபை கலைக்கப்பட்டது.

தமிழ் பேசும் மக்களின் அடிப்படை உரிமைகள், பாதுகாப்பு தொடர்பாக இந்தியாவின்

படிப்பகம்

www.padippakam.com

பொறுப்பைத் தொடர்ந்து வலியுறுத்துவதும், அதன் மூலம் சிறீலங்கா அரசை ஒரு தீர்வுக்காக நெருக்குவதும், சரியானதோர் அதிகாரப் பகிர்வுடன் அரசியலதிகாரத்தைக் கையிலெடுத்துக் கொள்வதன் மூலம் எமது மக்களும், நிலமும் பாதுகாக்கப்படுவதோடு அர்த்தமற்றுச் சாவுகளைக் குவிக்கும் யுத்த நோயினையும் தணிக்க முடியும்.

அரசுக்கு உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் பெரும் நெருக்கடிகளைக் கொண்டுவருவதன் மூலம்தான் இந்த அரசாங்கத்தை ஒரு சரியான தீர்வை நோக்கி வர நிர்ப்பந்திக்கலாம். ஆனால் சர்வதேசரீதியாக நம்மைக் குறித்து யாரும் அக்கறைப்படாத நிலைமைக்கே நாம் சென்றுகொண்டிருக்கிறோம். உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பயங்கரவாதிகளாகவே நம் எல்லோரையும் சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் நிலைமை தோன்றியிருக்கிறது. இந்நிலைமைகளை நாம் மாற்றியாக வேண்டும்.

இந்தியாவைத் தவிர வேறு எந்தவொரு நாடும் நம் பிரச்சினைத் தீர்வுக்கு உதவி செய்ய வரமுடியாதென்ற யதார்த்தத்தையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். சரியான அதிகாரப் பகிர்வுடன் கூடிய தீர்வொன்றுக்காக ஒருமித்துக் குரல் கொடுப்பதும், பல்வேறு முனைகளிலும் ெ ்குதலை ஏற்படுத்தும் வகையில் திட்டமிட்டுச் செயற்பட வேண்டியதும்தான் உடனடித் தேவையாக நம்முன் உள்ளது.

எம்.பி. பதவிகளுக்காகவென்றே திடீர்க் கூட்டமைத்துக் கொண்டவர்களும் ஒற்றுமை பற்றி என்னவெல்லாமோ கதையளப்பதைக் காணமுடிகிறது. இவர்களது கடந்தகால வரலாறும் தமிழ் மக்கள் அறியாத ஒன்றல்ல. தமிழ் அமைப்புக்களிடையே ஒற்றுமையையும், சமாதானமான உறவையும் உருவாக்கும் விடயத்தில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி எவ்வளவுதூரம் விட்டுக் கொடுப்புக்களோடும் சகிப்புத்தன்மையோடும் செயற்பட்டு வந்திருக்கின்றது என்பதை அனைவரும் நன்றாகவே அறிவர்.

இப்போதும் கூட தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் ஓர் உடன்பாட்டுக்கு வருவதன் மூலம் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் காப்பாற்றப்படும் எனவும், எமது மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய பலமிக்க சக்தியாக விளங்கலாம் எனவும் எதிர்பார்த்துப் பலவாறாகவும் முயற்சித்தோம். ஆனால், அக் கோரிக்கைகள் யாவும் தமிழர் விடுதலைக் கூட்டணியினரால் நிராகரிக்கப்பட்டது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி பலவீனமானது என்ற கருத்தின் அடிப்படையில் நாம் இக் கோரிக்கைகளை முன்வைக்கவில்லை. தமிழ் மக்களின் வாக்குகள் சிதறடிக்கப்படக் கூடாது என்பதற்காகவே குறைந்தபட்சம் அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களிலாவது போட்டித்தவிர்ப்பு உடன்பாடொன்றைச் செய்துகொள்ள முயற்சித்தோம். ஆனால் கூட்டணிப் பிரமுகர்களோ இன்றும் கூட, மக்களின் நலன்கள், அவர்களின் அபிலாஷைகள், இன்றைய தேவைகள் என்பனவற்றைப்பற்றிச் சிந்தித்துச் செயற்படுவதாகத் தெரியவில்லை.

றுபக்கம், சிறீலங்கா இராணுவத்தோடு இணைந்து செயற்பட்டு வரும் புளொட், டெலோ, ஈ. .பி போன்ற அமைப்புக்கள் தமது இருப்பைப் பாதுகாத்துக் கொள்ள அரசாங்கத்தின் இராணுவத் தீர்வு என்ற விடயத்திற்கே இவர்கள் ஆதரவாகச் செயற்பட்டு வருகின்றார்கள். எனவே இவர்களது நடவடிக்கைகள் தமிழ் மக்களின் நலன்களுக்கு விரோதமாகவே அமைகின்றன. புலிகளை மிகவும் கண்டிக்கும் இவர்கள் வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு ஆகிய மாவட்டங்களில் புலிகளைப் போன்றே கப்பம் வாங்குதல், வரி வசூலித்தல், கொலை, கொள்ளை போன்ற பல சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவற்றை நாம் சொல்லும்போது, ஏன் ஈ.பி.ஆர்.எல்.எவ் தவறு செய்யவில்லையா என திருப்பிக் கேட்கின்றார்கள். நாம் தவறு செய்யாதவர்கள் என்று எப்போதும் கூறவில்லை. இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை அமுல்படுத்தி மாகாண அரசை நிறுவிய காலகட்டத்தில் புலிகளுடன் தொடர்ச்சியான மோதல்கள் ஏற்பட்டது என்பது உண்மை. எமது சில தவறுகளை பகிரங்கமாக ஏற்றுக் கொள்கின்றோம். எம்மை நாம் சுயவிமர்சனம் செய்துகொள்கின்றோம். எமது தவறுகளை பல ஆண்டுகளுக்கு முன்னமேயே நாம் திருத்திக் கொண்டுள்ளோம்.

படிப்பகம்

www.padippakam.com

ஆனால் இவர்கள் தமது தவறுகளை நிறுத்தியதுமில்லை; திருத்திக் கொண்டதுமில்லை.

ஒருபுறம் ஜனநாயகச் சூழல் வந்துவிடக்கூடாது, மக்கள் அமைதியும், பயமுறுத்தலற்ற சூழ்நிலையிலும் தமது கருத்துக்களைச் சொல்லவைத்துவிடக்கூடாது என்று வலிந்து சண்டையைத் திணித்து அவதிகளை உருவாக்கும் புலிகள். மறுபுறம், பாராளுமன்றத்திலும், வெளியிலும் அரசாங்கத்தின் வாலாகச் செயற்பட்டுவரும் சில தமிழ் அமைப்புகள்.

தீவுப்பகுதியிலும், வவுனியா, திருகோணமலையிலும் தலைக்கு 110 ரூபா வீதம் ஊதியம் பெற்றுக் கொண்டு அரசபடைகளுக்கு ஆதரவாகச் செயற்பட்டு வரும் தமிழ் அமைப்புக்கள் பாரா்ளுமன்றத் தேர்தலிலும் அரசுக்கு ஆதரவாகவே குதித்திருக்கிறார்கள். இவ்வாறான ஆதரவினால் அரச படைகளின் உதவியோடு தில்லுமுல்லுச் செய்தாவது வெற்றிபெற்று விடலாமென எண்ணுகிறார்கள்.

பாராளுமன்றத்திலோ, தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் சரி, டெலோ, ஈரோ உறுப்பினர்களும் சரி அனைத்து அவசரகால நீடிப்புப் பிரேரணைகளின்போதும் அரசாங்கத்துக் ஆதரவாகவே வாக்களித்தார்கள், அல்லது சபைக்கு வராமல் மறைமுக ஆதரிப்பைத் தெரிவித்துக் கொண்டார்கள். மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவை பதவியிலிருந்து நீக்குவதற்கான குற்ற விசாரணையை எதிர்க்கட்சிகள் கொண்டு வந்தபோது இவர்கள் அதில் கையெழுத்திடாமல் அதியுத்தமருக்குத் தங்கள் விசுவாசத்தைக் காட்டிக் கொண்டார்கள்.

**அன்பிற்கினிய தமிழ் மக்களே!**

**யுத்த நெருக்குவாரங்கள், பயமுறுத்தல், பட்டினி, பரிதவிப்புகளுடனான அகதிவாழ்க்கை ஆகியவற்றிலிருந்து மீளவும்,**


**அமைதி, ஜனநாயகச் சூழலை ஏற்படுத்தவும்,**

**பிரச்சினைக்குத் தீர்வாக அர்த்தமுள்ள அதிகார அமைப்பொன்றை எடுக்கவும்,**

**வாய்வீச்சுக்களுடன் நின்றுவிடாத, சொந்த இருப்புக்காகச் சோரம் போய்விடாத, உறுதிமிக்க உங்கள் பிரதிநிதித்துவத்தைத் தெரிவு செய்யுங்கள்.**

**எதிர்வரும் தேர்தல் நாளான ஆவணி மாதம் 16ந்திகதி உங்கள் வாக்குச் சீட்டுகளில் பூ சின்னத்துக்கு நேரே புள்ளடியிட்டு ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பாகப் போட்டியிடும் உங்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யுங்கள்!**

## யுத்தமிடும் நோயினைத் தடுக்கவும்
## அர்த்தமுள்ள தீர்வினை எடுக்கவும்
## அழிவுகளை நிறுத்தி உரிமைகளை வென்றெடுக்கவும்
## பூவுக்கு வாக்களியுங்கள்.




**ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF)**

படிப்பகம்